# வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 1820 /ஆ2/2023 நாள். 06.10.2023

பொருள் பள்ளிக்கல்வி வேலூர் மாவட்டம் சிறப்பாசிரியர்கள். உடற்கல்விஆசிரியர்கள். MusicTeacher. Craft Teacher. Tailaring Teacher. காலிப் பணியிடத்தில் அலகுவிட்டு அலகு பணியிட மாறுதல் கலந்தாய்வு மூலம் பங்கேற்க விண்ணப்பங்களை கல்வித் தகவல் மேலாண்மை முறையில் ( EMIS) இணைய தளத்தில் பதிவேற்றம் செய்து கலந்தாய்வில் கலந்து கொள்ள அறிவுறுத்துதல் சார்பு

பார்வை சென்னை.3. துணை ஆணையர் (கல்வி) பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதம் க.து.ந.க.எண்.இ4/இ3/1107/2023 நாள். .10.2023

---

பார்வையிற் காணும் கடிதத்தின்படி வேலூர் மாவட்டம். அரசாணை நிலை எண்.43.பள்ளிக் கல்வி பக5(2) துறை நாள்.01.03.2023 பெருநகர சென்னை மாநகராட்சி புதியதாக இணைக்கப்பட்டுள்ள 139 பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகையான ஆசிரியர்கள் தங்கள் விருப்பத்தின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி ஈர்த்துக் கொள்ளப்படுவர் அல்லது அவர்கள் பணிபுரியும் ஒன்றியத்திலேயே பணியில் தொடரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதியதாக இணைக்கப்பட்டுள்ள 139 பள்ளிகளில் பணிபுரியும் 990 ஆசிரியர்களில் பெரும்பாலான ஆசிரியர்கள் சென்னை மாநகராட்சியில் தொடர்ந்து பணிபுரிய விருப்பம் தெரிவித்து சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் கட்டுப்பாட்டில் இயங்கும் பள்ளிகளில் பணிபுரிகின்றனர் மற்றும் மற்ற ஆசிரியர்கள் தங்கள் தாய் துறையான பள்ளிக் கல்வி துறை இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழே பணிபுரிந்து வருவதால் தற்போது சிறப்பாசிரியர்கள். உடற்கல்வி ஆசிரியர்கள் MusicTeacher. Craft Teacher. Tailaring Teacher பணியிடங்கள் காலியாக உள்ளது.

இக்காலியாக உள்ள பணியிடங்களால் மாணவர்கள் கல்வி நலன் பாதிக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இச்சூழ்நிலையை கருத்தில்கொண்டு இக்காலிப் பணியிடங்களில் சென்னை மாவட்டம் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து அலகுவிட்டு அலகு மாறுதல் மூலம் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பணியிட மாறுதல் பெற விருப்பமுள்ள MusicTeacher. Craft Teacher. Tailaring Teacher ஆகியோருக்கு ( EMIS) இணைய தள வாயிலாக Unit Transfer கலந்தாய்வு மூலம் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பலாமென தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. அதனடிப்படையில் வேலூர் மாவட்டத்திலுள்ள MusicTeacher. Craft Teacher. Tailaring Teacher. Unit Transfer கலந்தாய்வு மூலம் கலந்து கொள்ள விண்ணப்பங்கள் 05.10.2023 முதல் 08.10.2023 ( EMIS) இணைய தளத்தில் பதிவேற்றம் செய்து கலந்தாய்வு மூலம் தங்களுக்கு தேவையான பணியிடங்களை தேர்வு செய்து கொள்ள நடைமுறை உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே அலகுவிட்டு அலகு மாறுதல் மூலம் சென்னை மாவட்டம் மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள ஆசிரியர்கள் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரிய விருப்பமுள்ள ஆசிரியர்கள் ( EMIS) இணைய தளத்தில் 05.10.2023 முதல் 08.10.2023 பதிவேற்றம் செய்து 11.10.2023

Scanned with CamScanner

அன்று மாலை 04.00 மணி முதல் 05.00 மணி வரை சென்னை மாநகராட்சி அம்மா மாளிகை கூட்டரங்கம், சென்னை.3 இல் நடைபெறும் கலந்தாய்வில் கலந்து கொள்ளுமாறும் அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும் கலந்தாய்வில் கலந்து கொள்ளும் அனைத்து ஆசிரியர்களும் பள்ளிக் கல்வித்துறை மற்றும் தொடக்க கல்வித்துறை வழங்கப்படும் தடையின்மைச் சான்றிதழுடன் கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

6/10/22.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

6/10/22

பெறுநர்,
அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
அரசு /அரசு நிதியுதவி உயர்நிலை /மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

Scanned with CamScanner